



# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## மானியக் கோரிக்கை எண். 30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

அறிவிப்புகள்

**2024 - 2025**

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

மானியக் கோரிக்கை எண். 30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

அறிவிப்புகள்

2024–2025

## 1) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு புதிய Sheetfed CPC 4 Colour இயந்திரம் ஒன்று ரூ.9,00,00,000/- கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டு உட்கட்டமைப்பு மற்றும் மின் பராமரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

சென்னை அரசு மைய அச்சகத்தில் தமிழ்நாடு அரசின் நாட்காட்டி. உயர்நீதிமன்ற நாட்காட்டி, தமிழ்நாடு அரசின் கொள்கை விளக்க குறிப்புகள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பணிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நாட்குறிப்பேடுகள், காவலர் பயிற்சி கையேடுகள் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணைய ஆண்டு அறிக்கை, சிறுபான்மையினர் நலன் புள்ளியியல் கையேடு, தேர்தல் துறையிலிருந்து அதிக அளவிலான பணிகள் வண்ணப் பணிகளாக பெறப்பட்டு செயலாக்கம் செய்வதற்கும், பல்வேறு துறைகளின் அனைத்து வகையான பல வண்ண புத்தகங்கள், சிறப்பு பணிகள், போஸ்டர்கள் மற்றும் பல்கலைக்கழக விடைத்தாட்கள், பல வண்ண மேலட்டைகள் போன்ற பல்வேறு பணிகள் செயலாக்கம் செய்வதற்கும் ரூ. 9,00,00,000/- மதிப்பில் ஒரு புதிய Sheetfed Offset 4 Colour - CPC இயந்திரம் கொள்முதல் செய்து உட்கட்டமைப்பு மற்றும் மின் பராமரிப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## 2) திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு நிரலாக்க வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine) ஒன்று ரூ. 85,00,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு அவசரப் பணிகளான பல்கலைக்கழக விடைத்தாட்கள் மற்றும் அரசு தேர்வு இயக்ககத்தின் HSC + 1, HSC + 2 தேர்வு விடைத்தாட்கள், அனைத்து அரசு அலுவலகங்களுக்கான பொதுப் படிவங்கள், பதிவேடுகள், காவல், கல்வி மற்றும் மருத்துவத் துறைக்கான படிவங்கள் போன்ற பணிகள் வெட்டும் இயந்திரத்தில் மேற்கொள்ளும் போது குறித்த நேரத்தில் செயலாக்கம் செய்து அனுப்புகை செய்யவும், பணியில் சுணக்கம் மற்றும் தொய்வு ஏற்படாமல் தவிர்க்கவும், மற்றும் அதிக அளவிலான பதிவேடுகள் செயலாக்கம் செய்திடவும் புதிய நிரலாக்க காகிதம் வெட்டும் இயந்திரம் (Programme Cutting Machine) ஒன்று ரூ.85,00,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**3) சென்னை அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் மதுரை, சேலம் மற்றும் புதுக்கோட்டை அலகுகளில் உள்ள கணினி முன் அச்சுப் பிரிவிற்கு தேவைப்படும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS ரூ.37,33,358/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

1. கணினிகள் 22

   அரசு மைய அச்சகம் – 15

   அரசு கிளை அச்சகம், மதுரை – 3

   அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை – 2

   அரசு கிளை அச்சகம், சேலம் – 2
2. Butter Paper Printer (மதுரை மற்றும் சேலம்) 02
3. UPS 5 KVA (அரசு மைய அச்சகம்) 03
4. UPS 1 KVA (மதுரை) 02

சென்னை அரசு மைய அச்சகம் உள்ளிட்ட அரசு கிளை அச்சகங்களில் செயல்பட்டு வரும் கணினி முன் அச்சுப் பிரிவில், மாவட்ட அரசிதழ்கள், பல்கலைக்கழக பணிகள், கொள்கை விளக்க குறிப்புகள், மக்கள் சாசனம், நிதி நிலை அறிக்கை போன்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் பார்வைப்படிகள் எடுத்து ஒப்புதல் பெறவும், Butter Paper Output எடுத்து அச்சிடுவதற்கும் கணினி மற்றும் பிரிண்டர்கள் தேவைபடுவதால் புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS ரூ.37,33,358/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**4) சென்னை அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவிற்கு தேவையான மென் பொருட்களான Adobe Cloud Computing All Apps (including Adobe Indesign, Photoshop, Illustrator, Acrobat Pro, etc) ஓராண்டிற்கான சந்தா தொகை ரூ.14,51,400/– மற்றும் Coreldraw மென்பொருள் ரூ.6,23,040/– மதிப்பிலும் கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு மைய அச்சக முன் அச்சுப் பிரிவு பணியின் செயலாக்கத்திற்கு பயன்படுத்தப்படும் அத்தியாவசிய மென் பொருட்களான Adobe Cloud Computing All Apps (Inclulding Adobe Indesign, Photoshop, Illustrator, Acrobat Pro, etc) ஓராண்டிற்கான சந்தா தொகை 15 கணினிகளுக்கு ஆண்டு தோறும் தொடர் செலவினமாக ரூ.14,51,400/– மற்றும் Coreldraw மென்பொருள் 6 கணினிகளுக்கு தொடரா செலவினமாக ரூ. 6,23,040/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

## 5) சென்னை அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு Spot UV Machine ஒன்று ரூ.15,40,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

சென்னை அரசு மைய அச்சகத்தில் Spot UV பணிகளை மேலட்டைகளில் மேற்கொள்ளவும், மற்றும் மானிய கோரிக்கை தொடர்பான பணிகள், மருத்துவ துறையின் சிற்றேடுகள், அரசு துறைகள் சிற்றேடுகளின் முகப்பு அட்டைகள் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், Spot UV Machine ஒன்று ரூ.15,40,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**6) சென்னை அரசு மைய அச்சகம், மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு RO Water Plant 3 எண்கள் ரூ.10,44,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு மைய அச்சகம் மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பிற துறைகளிலிருந்து அச்சுப் பணிக்காக வருகை புரியும் அலுவலர்கள் ஆகியோரின் குடிநீர் தேவைக்காக சென்னை அரசு மைய அச்சகத்திற்கு (500 LPH) 1 எண்ணிக்கை மற்றும் சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு (250 LPH) 2 எண்ணிக்கைகள் என மொத்தம் 3 எண்ணிக்கைகள் RO Water Plant ரூ.10,44,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**7) ஆணையரகம் மற்றும் அரசு அச்சகங்களுக்கு அலுமினியம் ஏணி – 4 எண்ணிக்கைகள் மற்றும் அரசு எழுது பொருள் அலுவலகத்திற்கு ஹைட்ராலிக் ஏணி (Hydraulic Ladder) – 2 எண்ணிக்கைகள் ரூ.5,40,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையை சார்ந்த அலுவலகங்களில் பழுது பார்க்கும் பணிக்காகவும், மேற்கூரையை சுத்தம் செய்வதற்கும், மின்விசிறி, மின்விளக்கின் இணைப்பு ஒயர்கள் பழுது பார்க்கும் பணிக்கும், CCTV Camera, தீயணைப்பான்கள் அனைத்தும் சரிபார்ப்பதற்கும் மற்றும் ஆவணக் காப்பறையில் கோப்புகளை பராமரிப்பதற்கும் ஆணையரகம், அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம் திருச்சி மற்றும் சேலம் ஆகியவற்றிற்கு தலா ஒரு எண்ணிக்கையில் மொத்தம் 4 அலுமினிய ஏணிகள் மற்றும் அரசு எழுது பொருள் அலுவலகத்திற்கு ஹைட்ராலிக் ஏணி (Hydraulic Ladder) – 2 எண்ணிக்கைகள் ரூ.5,40,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**8) திருச்சி அரசு கிளை அச்சகத்திற்கு Cover/Envelope Punching Machine ஒன்று ரூ.4,72,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

திருச்சி அரசு கிளை அச்சகத்தில் தேர்வு துறை, தேர்தல் துறை மற்றும் அரசு அலுவலகங்களுக்கு தேவையான காகித உறைகள் செயலாக்கம் செய்வதற்கும், இவ்வலகில் பணிபுரியும் 12 பார்வையற்ற மாற்றுத்திறனாளி பணியாளர்கள் உறைகள் ஒட்டும் பணியினை Cover Punching முலம் செய்து கொடுப்பதற்கும் மற்றும் அதிக எண்ணிக்கையிலான உறைகளை குறைந்த நேரத்தில் செயலாக்கம் செய்திடவும் புதியதாக Heavy Duty Cover Punching Machine ஒன்று ரூ.4,72,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**9) சென்னை அரசு மைய அச்சக கணினி பிரிவிற்கு வெள்ளை காகிதத்தில் பார்வைபடிகளை அச்சிடுதல் மற்றும் நகலெடுத்தல் பணிக்காக A3 Black and White Monochrome Laser MFN Printer – 2 எண்ணிக்கைகள் ரூ.3,60,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு மைய அச்சகத்தில் உள்ள முன் அச்சு பிரிவில் தமிழ்நாடு அரசிதழ்கள், சிறப்பு வெளியீடுகள், மாவட்ட அரசிதழ்கள், மாண்புமிகு குடியரசு தலைவர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அமைச்சர்களின் சிறப்பு பணிகள், மாண்புமிகு சட்டமன்ற பேரவை நடவடிக்கைக் குறிப்புகள், தலைமை செயலக பணிகள், வரவு செலவு திட்டப் பணிகள், நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், மருத்துவம் மற்றும் காவல் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கான முக்கிய படிவங்கள், தேர்தல் பணிகள், கருவூல படிவங்கள் மற்றும் பல துறைகளின் ஆண்டறிக்கைகள், புத்தகங்கள், சட்ட முன்வடிவுகள், சட்டங்கள், அவசர சட்டங்கள், பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள், போன்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகள் செயலாக்கம் செய்வதற்கும், துறைகளுக்கு பார்வைப்படிகள் அச்செடுக்கவும், அரசிதழ் பணிகளில் ஒவ்வொரு நிலையிலும் அச்செடுத்து பிழைத்திருத்தம் செய்வதற்கும் A3 Black and White Monochrome Laser MFN Printer – 2 எண்ணிக்கைகள் ரூ.3,60,000/– மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**10) சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்திற்கு, 30 எண்கள் C C T V Camera ரூ.3,13,585/- மதிப்பில் ELCOT மூலம் கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு எழுதுபொருள் அலுவலகத்தில் சுமார் 50 கோடி மதிப்புள்ள காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் பராமரிக்கப்படுவதால், அலுவலகத்தின் பாதுகாப்பு கருதி CCTV Camera 30 எண்ணிக்கைகள் தமிழ்நாடு மின்னனு கழகம் (ELCOT) மூலம் ரூ.3,13,585/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**11) சென்னை அரசு மைய அச்சகத்தில் பெரிய அளவிலான வண்ண பார்வைப்படிகள் அச்சிடுதல் பணிக்காக Large Format Proofer / Plotter Type Printer ஒன்று ரூ.2,24,200/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

சென்னை அரசு மைய அச்சகத்தில் அரசு நாட்காட்டி, மாண்புமிகு உயர்நீதிமன்ற நாட்காட்டி மற்றும் பெரிய அளவிலான வண்ணப் பார்வைப்படிகள் அச்சிடுதல் பணிக்காக பல்வேறு வகையான காகிதத்தில் குறைந்த எண்ணிக்கையிலான பிரதிகள் அச்செடுக்கும் நேர்வில் பயன்படும் வகையில் 36" Large Format Proofer / Plotter type Printer ஒன்று ரூ.2,24,200/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

## 12) சென்னை அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு Polymer Rubber Stamp Making Machine (Chemical Free) ஒன்று ரூ.2,06,500/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர் அலுவலகங்கள், அனைத்து தலைமைச் செயலக துறை செயலாளர்கள் மற்றும் பிரிவுகள், அனைத்து துறைத் தலைமை அலுவலகங்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அனைத்து அரசு அலுவலகங்கள், அரசுத் தேர்வுகள் துறைக்கான மந்தன இரப்பர் முத்திரைகள் சென்னை அரசு மைய அச்சகத்தில் செயலாக்கம் செய்வதற்கு Polymer Rubber Stamp Making Machine (Chemical Free) ஒன்று ரூ.2,06,500/- மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

## 13) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரக வளாகத்தில் உள்ள பழமை வாய்ந்த லாரன்ஸ் கட்டடம் புதுப்பிக்கப்படும்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2 வளாகத்திலுள்ள நூறாண்டுக்கு மேலாக உள்ள பழமை வாய்ந்த லாரன்ஸ் கட்டடம் பொதுப்பணித் துறையின் மூலம் புதுப்பிக்கப்படும்.

## 14) திருப்பூர் மாவட்டத்தில் புதியதாக ஒரு அரசு கிளை அச்சகம் அமைக்கப்படும்.

சென்னை உயர்நீதிமன்ற வளாக அரசு கிளை அச்சகம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாக அரசு கிளை அச்சகம் ஆகிய அலகுகள் காலி செய்யப்பட்டதால், மேற்கு மாவட்டங்களான நீலகிரி, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களின் அரசிதழ்களை அச்சிடவும், மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள அரசு அலுவலகங்களுக்கு தேவையான படிவங்கள், படிவேடுகள், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பதிவேடுகளை திருப்பூர் மாவட்ட அரசு கிளை அச்சகத்தினை அணுகி மேற்கொள்வது எளியதாக இருக்கும் என்பதால், திருப்பூர் மாவட்டத்தில் புதியதாக ஒரு அரசு கிளை அச்சகம் அமைக்கப்படும்.

**மு.பெ. சாமிநாதன்**
**தமிழ் வளர்ச்சி மற்றும்**
**செய்தித் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.